அரியலூர் மாவட்டம் அரியலூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் லதாபாலுவை ஆதரித்து விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன் தீவிர வாக்கு சேகரித்தார் . உடன் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் மற்றும் தோழமைக் கட்சி நிர்வாகிகள், கழகத் தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

திருக்கடையூரில் நிவேதா எம்.முருகனை ஆதரித்து கனிமொழி கருணாநிதி எம்.பி. சிறப்புரை!

மயிலாடுதுறை, ஏப். 22 – மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளரும், மயிலாடுதுறை மாவட்டச் செயலாளருமான நிவேதா எம்.முருகனை ஆதரித்து கழக துணை பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி அவர்கள் திருக்கடையூரில் திறந்த வேனில் நேற்று வாக்கு சேகரித்து பேசினார்.

இப்போது திருக்கடையூர் கடைத்தெருவில் ஆயிரக்கணக்கான கழகத்தினர்,கூட்டணி கட்சியினர் ஏராளமானோர் வரவேற்புவழங்கினார்கள்.

அப்போது கழக வேட்பாளர் நிவேதா எம் முருகனை ஆதரித்து கழகத் துணைப் பொதுச்செயலாளர் கவிஞர் கனிமொழி கருணாநிதி பேசியதாவது:

நம்முடைய முதலமைச்சர் தளபதி தேர்ந்தெடுத்து உங்களிடம் வேட்பாளர் நிவேதா முருகனை ஒப்படைத்துள்ளனர். அவருக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து வெற்றி பெற செய்ய வேண்டும். நம்முடைய முதலமைச்சர் தளபதி அவர்கள் மக்களுக்கு தந்திருக்கின்ற வாக்குறுதிகள் எல்லாம் நிறைவேற்றி தந்திருக்கின்ற முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர்.

பெண்களுக்கு ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமை தொகை தருகிறேன் என்று சொன்னார்கள் அதை தந்த முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர். அடுத்த ஆட்சிக்கு வந்தவுடன் ஆயிரம் ரூபாய் 2,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். கல்லூரியில் படிக்கக்கூடிய நம்ம வீட்டுப் பிள்ளைகள் மாணவ, மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் தமிழ்ப் புதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டம் வழியாக ரூபாய் 1000 வழங்கப்படுகிறது2.0திராவிட மாடன் ஆட்சி அமைந்தவுடன் அது 1,500 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

இலவச லேப்டாப் கொடுத்துக் கொண்டிருந்தார்கள் அதை நிறுத்தியது எடப்பாடி பழனிச்சாமி. அதை மீண்டும் வழங்கியவர் நம்முடைய முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஐந்தாண்டுகளில் 35 லட்சம் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு வழங்கப்பட உள்ளது. மகளிர் சுய உதவி குழு பெண்கள் தொழில் தொடங்க முன்வந்தால் மானியத்துடன் ரூ.5 லட்சம் வரை கடன் வழங்கக்கூடிய ஆட்சி திராவிட முன்னேற்ற கழக ஆட்சி. விவசாயிகளுக்கு எந்தவித கட்டணமும் இல்லாமல் மின்சாரத்தை தந்தது கலைஞர் அவர்கள் அவர் வழியிலே தளபதி அவர்கள் மின் மோட்டார்கள் எந்தவித மீட்டர் இல்லாமல் ரூ.20லட்சம் விவசாயி களுக்கு வழங்க உள்ள முதலமைச்சர் நம்முடைய முதலமைச்சர் தளபதி அவர்கள்.

படித்துவிட்டு வேலை தேடிக் கொண்டிருக்கும் இளைஞர்களுக்கு நாம் முதலமைச்சர் பயிற்சி கொடுத்து அந்த பயிற்சி வழியாக அந்த நேரத்தில் மாதம் ரூ.1,500 வீதம் ஆறு மாசத்திற்கு வழங்கப்படும். அடுத்த ஆட்சி வந்த உடன் காலை உணவுத் திட்டம் எட்டாம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவிகளுக்கு விரிவு படுத்தி வழங்கப்படும். தேர்தல் வாக்குறுதி கொடுத்தால் அதன் நிறைவேற்றிக் கொடுப்பது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் அ.தி.மு.க. 2016 இல் செல்போன் கொடுப்பதாக வாக்குறுதி அளித்தார்கள். யாராவது ஒரு பொண்ணுக்காவது வழங்கப்பட்டதா என்றால் இல்லை. நானும் தமிழ் நாடு முழுவதும் சுற்றி வருகிறேன் அவர்களிடம் யாராவது ஒருவருக்கு செல்போன் கொடுத்தார்களா என்று கேட்டு வருகிறேன் கிடைத்ததா என்றால் கிடைக்க வில்லை. இப்படிப்பட்ட அ.தி.மு.க.விற்கு நாம் ஜீரோ தான் வழங்க வேண்டும்.

பழனிச்சாமி நம்மைப் பார்த்து சொல்கிறார் எங்கள் தேர்தல் அறிக்கையை காப்பி அடித்து விட்டார்கள் என்று அவர்கள் பாஸ் பண்ற அளவிற்காவது மார்க் வாங்கினால் காப்பிய அடிக்கலாம் அவர் வாங்கியது ஜீரோ மார்க்கு தான் எந்த தேர்தல் வாக்குறுதிகளையும் நிறைவேற்றாத பழனிச்சாமி தன்னுடைய சுயநலத்தி ற்காக டெல்லி சென்று தமிழ்நாட்டை ஆட்சியில் இருக்கும் போது அடகு வைத்தார்.

நாடாளுமன்றத்தில் மகளிர்க்கான மசோதா என்று சொல்லி கொண்டு வந்தார்கள் தற்போது இருக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையான 543 லிருந்து 850 ஆக அதிகமாக்க போகிறோம். அதிகமாகி விட்டு அதில் 33 சதவீதம் கொடுப்போம் அப்படி என்று சொல்லி உத்திரபிரதேசம்,பீகார் உள்ளிட்ட அவர்களுக்கு வாக்களிக்க கூடிய மாநிலங்களில்நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த உள்ளார்கள். நாடாளுமன்றத்தில் அவர்கள் எந்த மசோதா கொண்டு வந்தாலும் அவர்களுக்கு எண்ணிக்கை அதிகமாக இருந்தால் தான் கொண்டுவரும் மசோதாக்களை நிறைவேற்றிக் கொள்ளலாம். தமிழ்நாட்டு உரிமையை, தென்னிந்திய மாநிலமான ஆந்திரா, கர்நாடகா, கேரளா, மேற்குவங்கம் மாநிலங்களின் உரிமைகளை பறிக்கப்பட்டு பீகாரில் அவர்களின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதிகம் அதனால் எண்ணிக்கை உயர்த்துகிறார்கள். நம்முடைய தமிழ்நாட்டிற்கு எதிரான சட்டங்களை கொண்டு வரமுயற்சித்தார்கள் ஆனால் முதலில் இப்படி நடக்கும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் அத்தனை முதலமைச்சர்களையும் எச்சரித்தது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

சென்னையில் மாநாடு நடத்தி எல்லா முதலமைச்சரிடம் பி.ஜே.பி. கொண்டு வந்த மசோதா நாடாளுமன்றத்தில் நம்மால் புறக்க ணிக்கப்பட்டது. கருப்பு உடை அணிந்து சென்றோம். அந்த மசோதாவை தோற்கடித்து பட்டாசு வெடித்தோம். நாடாளுமன்றத்தில் பி.ஜே.பி.க்கு அது முதல் தோல்வி. பிரதமர் மக்களிடம் பேசியுள்ளார். அவர் தேர்தல் நேரத்தில்தான் மக்களிடம் பேசுவார் தமிழ்நாட்டு மக்கள் அவர்களை நிறுத்தி வைத்து கேள்வி கேட்க வேண்டும் என்கிறார். ஏன் மகளிர் மசோதாவை தி.மு.க. தோற்கடித்தது என்று கேட்க வேண்டும் என்றுள்ளார். பழனிச்சாமி ஏன் இந்த மசோதாவை தோற்கடித்தார்கள் தப்பு செய்தார்கள் என்று கேட்டுள்ளார். மக்களாகிய நீங்கள் மோடி, பழனிச்சாமி இரண்டு பேரையும் நிறுத்தி வைத்துக் கேளுங்கள் ஏன் மகளிர் மசோதா என்று பொய் சொல்லி தமிழ்நாட்டிற்கு எதிராக மசோதாவை கொண்டு வந்து தமிழ் நாட்டிற்கு துரோகம் செய்தீர்கள் எங்களுடைய தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் உங்களை தோற்கடித்துள்ளார். ஏன் தமிழ்நாட்டிற்கு எதிரான மசோதாவை கொண்டு வந்தீர்கள் என்று நிறுத்தி வைத்து அதிமுக, பிஜேபிகாரர்களை யாரைப் பார்த்தாலும் கேளுங்கள் ஏன் தமிழ்நாட்டுக்கு துரோகம் செய்தீர்கள், தமிழ்நாட்டிற்கு உரிமைகளை பறிக்கிறீர்கள், ஏன் தமிழ்நாட்டிற்கு நிதி வழங்க மாட்டீர்கள் என்று கேளுங்கள் மழை வெள்ளம் பாதிப்பின் போது நிவாரணம் கொடுத்தார்களா என்று கேளுங்கள்.

மோடி ஆட்சிக்கு வந்த பிறகு 100 நாள் வேலை சரியாக வழங்கப்பட்டுள்ளதா, சம்பளம் ஏறுதா என்றால் இல்லை ஏன்னா அதற்கும் நிதி கொடுப்பதில்லை. மோடி நூறு நாள் வேலையை நிறுத்த, குறைக்க ஒரு சட்டம் கொண்டு வந்தார் அதற்கும் எடப்பாடி பழனிச்சாமி எதுவும் சொல்லாமல் கைகட்டி நின்றார். தமிழ்நாட்டிற்கு நம்முடைய பிள்ளைகள் இந்தி படிக்க சொல்லி ஹிந்தி படிக்க வில்லை என்றால் காசு கொடுக்க மாட்டேன் என்று ரூபாய் 3,200 கோடி நமது பிள்ளைகளுக்கு கிடைக்க வேண்டிய நிதியை நிறுத்தி வைத்திருக்கிறார்கள் அவர்கள் உங்களிடம் வந்தார்கள் என்றால் கேளுங்கள் அந்த நிதியை கொடுத்துவிட்டு அதற்கு அப்புறம் பேசுங்கள் என்றும், 100 நாள் வேலையை ஏன் நிறுத்தினீர் அதற்கு அப்புறம் இங்கு கால் எடுத்து வையுங்கள் என்று கூறுங்கள்.

மகளிர் மசோதா நிறுத்தி விட்டோம் என்று சொல்கிறார்களே தெளிவாக நாம் சொல்லியிருக்கிறோம் இப்போ இருக்கின்ற 543 ல் 33 சதவீதம் பெண்களுக்கு கொடுங்கள் நாங்கள் ஆதரிக்கிறோம் தி.மு.க. ஆதரிக்கிறோம். பிஜேபி வருவார்கள் அவர்களிடம் கேளுங்கள் ஏன் இந்தியை திணிக்கிறீர்கள் ஏன் நிதியை கொடுக்க மறுக்கிறீர்கள் தமிழ்நாட்டிற்கு ரயில்வே திட்டங்களை தரமறுக்கிறீர்கள் என்ற கேளுங்கள். புயல், மழை வந்தால் ஏன் நிவாரணம் ஏன் கொடுக்க மறுக்கிறீர்கள் என்று கேளுங்கள், ஏன் தமிழ்நாட்டிற்கு மெட்ரோ ரயில் திட்டம் கொடுக்க மறுக்கிறீர்கள் என்று கேளுங்கள். தமிழ்நாட்டு மக்களுக்கு தமிழ் மொழிகளுக்கு தமிழ்நாட்டில் பிள்ளைக ளுக்கு துரோகம் செய்து கொண்டிருக்கிறீர்கள் என்று கேளுங்கள் தமிழ்நாட்டிற்கு தொடர்ந்து துரோகம் செய்து கொண்டிருக்கின்ற பி.ஜே.பி., அ.தி.மு.க. கூட்டணியை வீழ்த்தி இந்த தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் சரியான பாடத்தை புகுத்தி தளபதி அவர்களின் கரத்தை வலுப்படுத்த வேட்பாளர் நிவேதா முருகன் எம். முருகன் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க மீண்டும் என கேட்டுக்கொள்கிறேன்

இவ்வாறு கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. அவர்கள் பேசினார்.

வாக்கு சேகரிப்பின் போது மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம் கழக தகவல் தொழில் நுட்ப அணி துணை செயலாளர் பி.எம்.ஸ்ரீதர் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து மகேந்திரன் ஜி.என்.ரவி, மாவட்ட கழக துணை செயலாளர் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, ஒன்றிய கழக செயலாளர் அமிர்த. விஜயகுமார், பி.எம்.அன்பழகன் அப்துல் மாலிக் ஏ.ஆர்.ராஜா, பொதுக்குழு உறுப்பினர்கள் நத்தம் ஏ.வின்சென்ட் ஜெ.கபிலன் மற்றும் வி.எஸ். பிரபாகர், பரிதி, செந்தில்குமார் கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

காங்கேயம் சட்டமன்றத் தொகுதி, மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கழக வேட்பாளர், அமைச்சர் மு.பெ.சாமிநாதன் காங்கேயம் நகரத்திற்குட்பட்ட தொட்டியபட்டி, அகிலாண்டபுரம், கோட்டை மாநகர், அமராவதி நகர், கலிமேடு, அண்ணா நகர், காமராஜ் நகர் உள்ளிட்ட பகுதிகளில் வீடு வீடாகச் சென்று "உதயசூரியன்" சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் நகர கழக செயலாளர் வசந்தம் நா.சேமலையப்பன் நகர்மன்ற தலைவர், நகர இளைஞர் அணி அமைப்பாளர் சூரிய பிரகாஷ் உள்பட கூட்டணி கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

"திராவிட மாடல்" ஆட்சிதான்

சிறுபான்மையினர் - விளிம்புநிலை மக்களின் பாதுகாப்பு அரண்!

அன்பில் மகேஸ் பொய்யாமொழியை ஆதரித்து தொல்.திருமாவளவன் பேச்சு!

திருச்சி, ஏப். 22 - தமிழகத்தின் தற்போதைய அரசியல் சூழலில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான 'திராவிட மாடல்' ஆட்சி தொடர வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் அவர்கள் திருச்சி கிழக்குத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் கிழக்கு சட்டமன்ற வேட்பாளர் இனிகோ இருதயராஜ் ஆதரித்து கீழப்புதூர் கீழக்கரை தாராநல்லூர் ஆகிய பகுதிகளில் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் திருவெறும்பூர் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சட்டமன்ற வேட்பாளருமான அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்ற தேர்தல் பரப்புரையில் எழுச்சி உரையாற்றினார்.

புரட்சிகரமான திட்டங்களும் திராவிட மாடலும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு, சமூகத்தின் அனைத்துத் தரப்பினருக்குமான திட்டங்களைச் செயல்படுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டார்:

மகளிர் விடியல் பயணம்: அரசுப் பேருந்துகளில் பெண்களுக்கு இலவசப் பயணம். மகளிர் உரிமைத் தொகை: தற்போது வழங்கப்பட்டு வரும் 1000 ஊக்கத்தொகையை 2000ஆக உயர்த்தும் முன்னெடுப்பு.

கல்வி மற்றும் திறன் மேம்பாடு: மாணவர்களின் எதிர்காலத்தை உறுதி செய்யும் 'நான் முதல்வன்' திட்டம், உயர்கல்வி மாணவர்களுக்கான 'புதுமைப் பெண்' மற்றும் 'தமிழ்ப் புதல்வன்' நிதி உதவித் திட்டங்கள்.

பசிப்பிணி போக்கும் திட்டம்: அரசுப் பள்ளி மாணவர்களுக்கான காலைச் சிற்றுண்டித் திட்டம்.

தலித் கிறிஸ்தவர் உரிமைக்கான போராட்டம்

தலித் கிறிஸ்தவர்களைப் பட்டியல் இனத்தில் (SC) சேர்க்க வேண்டும் என்ற நீண்ட காலக் கோரிக்கையை விசிக தொடர்ந்து முன்வைத்து வருகிறது. இந்தக் கோரிக்கை நிறைவேறவும், தலித் கிறிஸ்தவர்களுக்கான உள் இடஒதுக்கீட்டை உறுதி செய்யவும் தி.மு.க. ஆட்சி தொடர வேண்டியது காலத்தின் கட்டாயம் என அவர் வலியுறுத்தினார்.

அரசியல்விமர்சனங்கள்: பா.ஜ.க. மற்றும் அதன் நிழல் கூட்டணிகள் பா.ஜ.க. அரசு சிறுபான்மை யினருக்கு எதிராகச் செயல்படுவதாகக் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார்:

பா.ஜ.க. எதிர்ப்பு: வெளிநாட்டு நிதி உதவி பெறும் கிறிஸ்தவ நிறுவனங்களை முடக்குவது (FCRA), மத உணர்வுகளைப் புண்ப டுத்துவது போன்ற செயல்களில் பாஜக ஈடுபடுவதாகச் சாடினார்.

அ.தி.மு.க. விமர்சனம்: பாஜகவின் கொள்கைகளைச் சுமந்து வரும் அதிமுகவிற்கு மக்கள் தகுந்த பாடம் புகட்ட வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார்.

நடிகர் விஜய் மீதான விமர்சனம்: நடிகர் விஜய் (ஜோசப் விஜய்) மறைமுகமாக பாஜகவின் நலன்களுக்குத் துணை போவதாகவும், சிறுபான்மையினரின் வாக்குகளைப் பிரித்து திமுக ஆட்சியை அகற்றுவதற்காகவே அவர் கட்சி தொடங்கியுள்ளதாகவும் குற்றம் சாட்டினார்.

நல்லெண்ண இயக்கத்தின் நிறுவனத் தலைவரும், உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளருமானஅண்ணன்இனிகோ இருதயராஜ் அவர்களை ஆதரித்துப் பேசிய அவர்:

உதயசூரியன் சின்னம்: இதனை 'கிறிஸ்தவர்களின் பாதுகாப்புச் சின்னம்' எனக் குறிப்பிட்ட திருமாவளவன், சிறுபான்மையினர் வாக்குகளைச் சிதறவிடாமல் உதயசூரியனுக்கு வாக்களிக்கக் கேட்டுக்கொண்டார்.

வேட்பாளர் இனிகோ இருதயராஜ் அவர்கள் மிகவும் எளிமையானவர், மக்களுக்காக எப்போதும் களத்தில் நிற்பவர் எனப் புகழாரம் சூட்டினார்.

மதச்சார்பற்ற கொள்கைகளையும், சமூக நல்லிணக்கத்தையும் பேணிக் காக்க வேண்டியது ஒவ்வொரு வாக்காளரின் கடமை. எனவே, விளிம்புநிலை மக்களின் உரிமைகளுக்காகவும், தமிழகத்தின் வளர்ச்சிப் பாதை தொடரவும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து மதச்சார்பற்ற கூட்டணியைப் பெருவெற்றி பெறச் செய்ய வேண்டும் எனத் தொல். திருமாவளவன் அவர்கள் தனது உரையை நிறைவு செய்தார்.

இறுதியாக திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும் திருவெறும்பூர் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளருமான அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழிவிற்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும் என கேட்டுக்கொண்டார்

இந்நிகழ்வில் தி.மு.க கழக மாநகரச் செயலாளர் மு.மதிவாணன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் வண்ணை அரங்கநாதன், பகுதி கழகச் செயலாளர் ராஜ்முஹம்மத், பாபு மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் பொது மக்கள் பெரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தொண்டாமுத்தூர் சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் என்.ஆர்.கார்த்திகேயனுக்கு ஆதரவாக ஆலந்துறை பேரூர் பகுதிக்குட்பட்ட வார்டுகளில் கோவை வடக்கு மாவட்ட கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி வீதி, வீதியாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி தலைவர்கள், நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், தேர்தல் பொறுப்பாளர்கள், பூத் கமிட்டி நிர்வாகிகள், அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



பல்லடம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின், தி.மு.கழக வேட்பாளர், மத்திய மாவட்டக் கழக செயலாளர் க. செல்வராஜ் பல்லடம் நகரத்திற்குட்பட்ட டி.இ.எல்.சி சகாயர் ஆலயம் மற்றும் புனித வேளாங்கண்ணி அன்னை ஆலயத்தில் பொதுமக்களிடம் "உதயசூரியன்" சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். இதில் பல்லடம் நகரக் கழகச் செயலாளர் நா.ராஜேந்திரகுமார் உள்பட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

கரூர் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் ஆசி எம்.தியாகராஜன் பசுபதிபாளையம் பகுதி தேவாலயங்களுக்குச் சென்று கிறிஸ்தவ மக்களை சந்தித்தார். அவரை வரவேற்று உதயசூரியனுக்கே எங்கள் வாக்கு என உறுதியளித்தனர். அருகில் காலனி செந்தில் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

திருவையாறு தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் தஞ்சை மத்திய மாவட்ட செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ., திருவையாறு வடக்கு ஒன்றிய பகுதிகளில் வாக்கு சேகரித்தார். உடன் ஒன்றிய செயலாளர் வை. சிவசங்கரன் உள்ளார்.